படுத்துகிறவர்களுக்கு நூலை வழங்கவேண்டும் என்று நாம் வற்புறுத்தி யிருக்கிறோம். நேற்று நடந்த பேச்சுவார்த்தைகளில் ஏற்றுக்கொண்டிருக் கிறார்கள். மகிழ்ச்சிகரமான செய்தியாகும்.

திரு. கே. என். குமாரசாமி : செயற்கைப் பட்டு நூலுக்கான கோட்டா வைப் பெற்றுக்கொள்கிற மாஸ்டர் வீவர்கள் அதை வெளியே விற்று விட்டு, அந்த பாக்டரியை நடத்துவதே இல்லை. பாக்டரி நடத்துவதாக அவர்கள் கோட்டா பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதை அரசு கண் காணித்து, அப்படி கோட்டா பெற்று தொழிற்சாலை நடத்தாமல் இருப்ப பவர்கள்மீது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் குறையை நீண்ட காலமாக இந்தப் பக்கத்திலிருந்து, அரசுத் தரப்பிலிருந்து இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இன்றைக்காவது அதை ஒப்புக்கொண்டதற்கு நன்றி.

திரு. த. சோனையா : செயற்கைப் பட்டு இல்லாத காரணத்தினால் நிறைய நெசவாளர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நெசவாளர்களின் அவதியைப் போக்குவதற்கு அரசாங்கமே இந்தப் பட்டுத் தயாரிப்பதற்கான தொழிற்சாலையை ஆரம்பிக்க செயற்குறிப்பு இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படியானால் நெசவாளர்கள் நிறைய இருக்கும் மதுரை மாவட்டத்தில் இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எந்த இடம் என்பது பின்னாலே நிர்ணயிக்கப்படும்.

Radhapuram sub-taluk

***700 *Q.*—Thiru T. GANAPATHY : Will the Hon. the Minister for Revenue be pleased to state—**

(*a*) whether there is any proposal to upgrade the Radhapuram sub-taluk into a main taluk ; and

(*b*) if so, the headquarters proposed therefor ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) ஆம், பரிசீலனையில் உள்ளது.

(இ) இது குறித்து தக்க தருணத்தில் முடிவெடுக்கப்படும்.

1974 மார்ச் 30]

திரு. டி. கணபதி : தலைவரவர்களே, இந்த நிதி ஆண்டில் இராதாபுரம் துணைவட்டம், வட்டமாக மாற்றி அமைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மொத்தம் 40 சப்-தாலுகாக்கள் இருக்கின்றன. இவைகளை படிப்படியாக தாலுகா அந்தஸ்துக்கு உயர்த்தும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. தாலுகாவாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. கார்த்தீசன் : இப்படி பரிசீலனை செய்யப்பட்டால், ராதாபுரம் தாலுகாவாக மாற்றப்படும்போது, அதன் மத்தியில் டவுன்ஷிப் இருப்பதால் அதை மையமாகக்கொண்டு தாலுகா அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. மு. இரத்தினசபாபதி : தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் வேறு துணைவட்டங்கள் எதையாவது வட்டமாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நெல்லை மாவட்டத்தில் 5 சப் தாலுகாக்கள் இருப்பதாகப் புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. அவை, ஒட்டப்பிடாரம், சிவகிரி, பாளையங்கோட்டை, ராதாபுரம், சாத்தான் குளம்.

திரு. கோ. செபமாலை : தலைவரவர்களே, விருதாசலம் வட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இருக்கிறதா ? அதுபற்றி பல நமூனைக்கள் தயாரிக்கப்பட்டு அரசுக்கு வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். எப்போது பிரிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எல். கணேசன் : தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தை புதிதாக உருவாக்கியிருப்பதால், அறந்தாங்கி வட்டத்தை சேர்ந்த பேராவூரணி துணை வட்டத்தை வட்டமாக மாற்றி, பட்டுக்கோட்டை கோட்டத்தை நிலைக்கும்படி செய்கின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக்கேள்வி திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தது. தனிக்கேள்வி போட்டால் பதில் தரப்படும்.